1982 மார்ச் 4]

எடுத்துக்கொண்டதன் காரணமாக, எல்லா கட்சியினரையும் பேச வைத்து நல்ல ஸ்கீமைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே தண்ணீர் பால் கிட்டயே போகாது. மருத்துவமனைக்குத்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பஸ்கள், லாரிகளுக்கான தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

* வினா எண் 335.—திரு. செ. செம்மலை மற்றும் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோருக்கு பஸ்கள், மற்றும் லாரிகள் தேசிய பர்மிட் வழங்க ஒதுக்கீடு அளித்துள்ளது போல் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நிலைப் பேருந்து உரிமங்கள் வழங்கு வதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு, செய்யப்பட்டுள்ளது. வாடகை லாரி உரிமங்கள் வழங்குவதில் எண்ணிக்கை கட்டுப்பாடு இல்லாததால் ஒதுக் கீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். அப்படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் என்று தனி ஒதுக் கீடு இல்லை என்றாலும் நேஷனல் பெர்மிட் வழங்குகின்ற நேரத்திலே பிற்படுத் தப்பட்டவர்களைப் பற்றி அரசு கவனத்தில் கொள்கின்றதா ? இந்த ஆண்டு பஸ்களுக்கான தேசிய பெர்மிட் வழங்குகின்றபோது தனியார்களுக்கு அப்படிப் பட்ட பெர்மிட்டுகள் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்கின்ற வழிமுறைகள் இதுவரை இல்லாத காரணத்தால்தான் அதுபற்றி கவனத்தில் கொண்டு செய்யப்பட வில்லை. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பெர்மிட்டுகள் நிச்சயமாகக் கிடைத்திருக்கின்றது என்பதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஐயம் வேண்டாம். ஆனால் எதிர்காலத்திலே இதை இப்படிச் செய்வதற்குரிய வகையிலே அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்று எற்கெனவே சொன்னேன்.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படுவது பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசால் வழங்கப்படு கின்ற சலுகைகள் தவறான முறையிலே பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற வகையிலே அந்த சலுகைகளின் அடிப்படையிலே பெர்மிட்டுகளைப் பெற்ற வர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு களுக்கு வேறு யாருக்கும் மாற்றக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஆணையை நாம் இதுவரை பிறப்பிக்கவில்லை. ஆனால் வாங்கிய உரிமங் களைத் தேவையான நல்ல காரியங்களைக் காட்டாமல் மாற்றிக்கொள்ள முடியாது என்று இருக்கின்ற சட்டம் எல்லோருக்கும் பொருந்துகின்ற வகை யிலேதான் இருக்கின்றது. ஆகவே அதுவே போதும் என்று நாங்கள் நம்பு கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, லாரிகளுக்காக நேஷனல் பெர்மிட் கேட்டு அப்ளிகேஷன் போட்டவர்களில் யார்யாருக்கு இதுவரை பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரம் அறிந்துகொள்ளப்படாமல் இருக்கின்றது. ஆகவே அரசு உடனடியாக அதை அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு வார காலத் திற்கு முன்பே அது அறிவிக்கப்பட்டுவிட்டதாகத்தான் நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட தகவல் வந்திருக்கின்றது. அப்படி அறிவிக்கப்படாமல் இருக்குமேயானால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து சொல்வார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thiru V. KRISHNAMOORTHY : The Hon. Minister should be definte while answering questions. He should not presume things.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டதாக சொல்கிறார்கள். அதிலே பல வழக்குகளில் ஆஜர் ஆகிய வக்கிலாகிய எனக்கே அது குறித்து அறிவிக்கப்படவில்லை என்றால், இப்படி அறிவிக்கப்பட்டதாக சொல்வது தவறான தகவல் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் விளக்குவாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் களோடு சேர்த்துக் கொண்டுதான் என்னையும் சொன்னேன். எனக்கு அப்படி தகவல் வந்தது என்ற நினைப்பில், அறிவிக்கப்பட்டதாக நம்புகிறேன்

1982 மார்ச் 4]

என்றுதான் சொன்னேன். நிச்சயமாக அறிவிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. அதற்குள் அதை தவறான தகவல் என்று சொல்லிவிட வேண்டாம். நிச்சயமாக வேண்டுமானால், நாளையதினம் தெரிந்துக் கொண்டு வந்து தெரிவிக்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசீய உரிமங்களை வழங்குகிறபோது, படித்து வேலையில்லாமல் இருக்கக் கூடிய பட்டதாரிகளுக்கு முன் உரிமை கொடுத்து வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு தேசீய உரிமம் வழங்குவதிலே ஏற்பட்ட கேள்வி இது. அதிலே பல்வேறு வழிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே இதுவும் கூட வருகிறது என்று நம்புகிறேன்.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அரிசனங்களுக்கு தேசீய பெர்மிட் கொடுப்பது போல, பிற்படுத்தப்பட்டோருக்கும் கொடுக்கப்படுமா என்பது குறித்து. இதுவரைக்கும் அரிசன மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு என்று இந்த தேசீய பெர்மிட்டுகள் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி கொடுக்கப்பட்டவர்களில் யாராவது அதை விற்பதற்கு முன் வந்திருக்கிறார்களா ? ஏனென்றால் அப்படி ஒரு கேள்வியை கனம் அங்கத்தினர் கேட்டார். அதுபோல் உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிய கேள்வியாக இது இருப்பதால், ஆதி திராவிட மக்களில் எத்தனை பேருக்கு இந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனாலும் தேசீய பெர்மிட்டுகளைப் பொறுத்தவரையில் 18 சதவீதம் ஒதுக்கீட்டை இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதை வாங்கியவர்கள் யாராவது விற்றிருக்கிறார்களா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் அதை விற்பதற்கு யாருக்குமே உரிமை கிடையாது. தேவையானால் சொந்தக்காரர்கள் யாருடைய பெயருக்காவது மாற்றலாமே தவிர, விற்பனை செய்ய முடியாது. அதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 356-ம், 358-ம் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பெறுகிறது. வினா எண் 357 இதிலேயே வேறு பொருள் பற்றியது என்பதால், இதை அதற்கடுத்து எடுத்துக் கொள்ளலாம்